
பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 17 செவ்வாய்க்கிழமை 01.07.2025 கதிர் 234



## இது ரகசியம் அல்ல!

நேற்று ஒரு காணொலியைப் பார்க்கக் கிடைத்தது. 15.06.25 யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு (ஸ்பொட் லைட்) தமிழ்த் தேசிய மக்கள் ☞2

## வடக்கு கிழக்கில் 34 சபைகள் தமிழ் அரசுக் கட்சியின் வசம்

### அதன் செயலாளர் சுமந்திரன் பெருமிதம்

'வடக்கு, கிழக்கில் 34 சபைகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன். இது மாபெரும் வெற்றி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்த மாபெரும் வெற்றிக்காக அயராது உழைத்த எமது கட்சியின் தலைவர், மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள், அபிமானிகள் ஆகியோருக்கும், எமது வேட்பாளர்கள் அனைவருக்கும் கட்சி சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேவேளை, நிர்வாகங்களை அமைப்பதில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றைய கட்சியினருக்கும் எமது நன்றிகள்" என்று வெளிநாட்டில் இருந்தபடி தனது முகப் புத்தகத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் கடைசியாக இரண்டு சபைகள் இன்று அமைக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய இரண்டிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நிர்வாகத்தை அமைத்திருக்கின்றது.

வடக்கு கிழக்கில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ☞2

### செம்மணி மனிதப் புதைகுழியில்

## சிக்கலான நிலையிலுள்ள எலும்புக்கூடுகளை அகற்றவேண்டியிருப்பதால் பணிகள் தாமதம்

(பிரேமானந்த்)

செம்மணி மனிதப் புதைகுழியின் ஒரு பகுதியான அரியாலை சிந்துப்பாத்தியில் அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 2 நேற்று முழுமையாக அகற்றிப் பொதி செய்யப்பட்டன. எலும்புக்கூடுகள் ஒன்றன் மீது ஒன்றாகவும் ஒன்றுடன் ஒன்று கொழுவிய நிலையிலும் இருப்பதனால், அவற்றைத் தனித்தனியாக அப்புறப்படுத்தி எடுத்துப் பொதி செய்யும் பணிகளை மிக மெதுவாகவும் கவனமாகவுமே மேற்கொள்ளவேண்டியிருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் செம்மணியின் மூன்றாவது தொகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் அனைத்தும் அகற்றி முடிக்கப்படவில்லை. இன்றும் அவற்றை அகற்றும் பணிகள் தொடரும். அதேநேரம், தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளைவிட அதிகளவில் எலும்புக்கூடுகள் இருக்கக்கூடும் என்று கருதப்படும் நான்காவது தொகுதியைத் தோண்டும் பணி இன்று தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்றைய தினம் இரு சிறுவர்களின் எலும்புக்கூடுகள் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டன. இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள ☞2

## 2600 வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு ஆனால் இதுவரையில் தமது சொத்து விவரங்களை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சுமார் 2600 வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ☞2

# செம்மணியை மூடிமறைக்க முற்படுகிறதா ஆளும்தரப்பு?

## சிசீரிவி எங்கே? பத்திரிகையாளர்களுக்கு ஏன் கட்டுப்பாடு?

## கேள்விகளை எழுப்பி சந்தேகம் வெளியிடுகிறார் சாணக்கியன் எம்.பி.

செம்மணியில் அதிக எண்ணிக்கையான மனிதர்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்படும் நிலையில் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகளை ஆளும்தரப்பு முன்னெடுக்கத்தவறுவதன் காரணமாக அதனை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்றுப் பிற்பகல் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: -

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பில் நேற்றில் இருந்து சில விடயங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவையிருக்கின்றது. செம்மணியில் தொடர்ந்து மனித எச்சங்கள் பெறப்பட்டுவருகின்றன.

இதுவரையில் 33 பேரின் எச்சங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த மனித எச்சங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுமானால் சில நடவடிக்கைகளை ஆளும்தரப்பு முன்னெடுக்கவேண்டும். ஆளும்தரப்பு அவற்றை முன்னெடுப்பதிலிருந்து தவறி வருகின்றது. இதனை ☞2

## நள்ளிரவு முதல் எகிறியது எரிபொருட்களின் விலை

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுஎன்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 289 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 185 ரூபாவாகும்.

92 ஒக்டேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 305 ரூபாவாகும்.

இதேவேளை, லங்கா சுப்பர் டீசல் 4 ஸ்டார் யூரோ 4 லீற்றர் ஒன்றின் விலையிலும் (325 ரூபா), லங்கா பெற்றோல் 95 ☞2

## தருமபுரத்தில் சிக்கியது 80 கிலோ கேரள கஞ்சா

### 55 வயதுப் பெண்ணும் கைது



கிளிநொச்சியில் ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 80 கிலோ கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று மயில்வாகனபுரம் கொழுந்துப்புலவு பகுதி வீடொன்றில் தேடுதல் நடத்தப்பட்டது. வீட்டின் பின்புறமாக மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்த 79 கிலோ 245 கிராம் நிறை கொண்ட கேரளா கஞ்சாவினை தர்மபுரம் பொலிசார் ☞2

## செம்மணி பற்றிய ஏ.ஐ. படங்களை பரப்பினால் இனி சட்ட நடவடிக்கை

### சட்டத்தரணி எச்சரிக்கை

சமூகவலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் செம்மணி மனித புதைகுழி தொடர்பான செயற்கை நுண்ணறிவுப் படங்களை பரப்புபவர்களுக்கு எதிராக இனிமேல் சட்;ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா எச்சரித்துள்ளார். புதைகுழி தொடர்பான தவறான தகவல்களை இந்தப் படங்கள் பரப்புவதன் காரணமாக சட்ட ☞2

## தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பை கடும் சொல்லால் ஹர்ஷன விமர்சிப்பு

அதிகாரத்துக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் தேசிய மக்கள் சக்தி இன்று அரசியல் விலைமாதுவாகியுள்ளது. அதிகாரத்துக்காக அனைத்தையும் காட்டிக் கொடுக்கும் நிலைப்பாட்டையே இந்த ஆளும்தரப்பு பின்பற்றுகின்றது. இந்த ஆளும்தரப்பு குண்டர் கும்பலை உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி அராஜகத்திலும் ஈடுபடுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பரப்புரையின்போது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு மக்களுக்கு ☞2

## இனி இது .....

முன்னணியின்செயலாளர்கஜேந்திரன்வழங்கிய செவ்வி அது. அதிலே அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி மற்றும் பதிலை அவரவர் வசனங்களில் அப்படியே கீழே தருகின்றேன்.

“நாளைவவுனியா மாநகர சபையிலே மேயர் தெரிவு நடைபெறப்போகின்றது. இதிலே வந்து உங்களுடைய கூட்டணிக்குள்ளே இருக்கின்ற கட்சிக்குத்தான் அதிகமான வாய்ப்புக்கள் அங்கு, மேயர் வேட்பாளர் நியமிக்கப்பட இருக்கிறார். இங்கே தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவு என்பது உங்களுக்குத் தேவை. இல்லையென்றால் தேசிய மக்கள் சக்திதான் அங்கு ஆட்சியமைக்கப் போகின்றது. இந்தச் சூழ்நிலையை தமிழ் அரசுக் கட்சி எவ்வாறு கையாளும் என்று நினைக்கிறீர்கள்?“ இது நெறியாளரின் கேள்வி.

‘‘என்பிபியை ஆட்சியமைக்க அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவே எங்கள் கூட்டணி முடிவெடுத்திருக்கிறது. அது முதலாவது விடயம். இரண்டாவது, என்பிபியோடு ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய தரப்புக்கள் ஆட்சியமைக்கவும் அனுமதிப்பதில்லை என்பது. அந்தவகையிலேவவுனியாமாவட்டத்தில்அல்லது வன்னி மாவட்டத்திலே பல இடங்களில் உந்த ஆபத்து இருக்கிறது. குறிப்பாக நெடுங்கேணியை எடுத்துக்கொண்டால் பேரினவாதக் கட்சிகள் ஆட்சியமைப்பது என்பதற்கு அப்பாலே வந்து, ஒரு இனவெறி கொண்ட சிங்களப் பிரதிநிதிகளே வந்து, தவிசாளர்களாக வரக்கூடிய ஆபத்து இருக்கின்றது. நேரடியாகக் குடியேற்றத்தின் மூலம் வந்த எங்கள் காணிகளை அபகரித்துக் குடியேறி எல்லை மீள் நிர்ணயம் ஊடாக வந்து பெரும்பான்மையாக்கப்பட்டமையால் உறுப்பினராக்கப்பட்ட ஒரு இனவெறி கொண்ட தரப்பு அங்கே இருக்கிறது. அவர்கள் அதைக் (சபையை) கைப்பற்றினால் வந்து தமிழர்களின் கதை முடிந்துவிடும். அந்த இடங்களிலே வந்து எந்தவித நிபந்தனையும் இன்றி தமிழ் தரப்பு ஆட்சியைப் பிடிப்பதற்கு ஒத்துழைப்பது என்பது எங்களுடைய தீர்மானம்‘‘ என்பது கஜேந்திரனின் பதில்.

அதில் அவர் குறிப்பிட்ட, ‘‘என்பிபியை ஆட்சியமைக்க அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவேஎங்கள்கூட்டணிமுடிவெடுத்திருக்கிறது. அது முதலாவது விடயம். இரண்டாவது, என்பிபியோடு ஒத்துழைத்துச் செயற்படக்கூடிய தரப்புக்கள்ஆட்சியமைக்கவும்அனுமதிப்பதில்லை என்பது“என்றுமிகத்தெளிவாகக்கூறியிருந்தாலும் மன்னாரில் அவரது கொள்கைக் கூட்டாளிகளான ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் என்பிபியோடு சேர்ந்து ஆட்சியமைத்திருப்பது குறித்தோ, என்பிபியோடு சேர்ந்து ஆட்சியமைத்த தரப்புஇன்னும்தமதுகொள்கைக்கூட்டில்இருப்பது குறித்தோ எந்தக் கருத்தையும் இதுவரையில் பகிரவில்லை.

கொள்கைக்கூட்டைஏற்படுத்தியபோது, அதற்கு முந்தைய காலங்களில் அவர் ஒட்டுக்குழுக்கள் குறித்துஅவர்ஆற்றியஉரைகளைமறந்துபோனது போல, சிலவேளைகளில் இந்தப் பேட்டியில் தான் கூறியதையும் அவர் மறந்திருப்பார். அதனால் இங்கு ஞாபகப்படுத்தியிருக்கின்றேன். இதன் பின்னராவது அவர் தனது கள்ள மௌனத்தைக் கலைக்கிறாரா என்று பார்ப்போம். அந்தப் பேட்டியில் அவர் வேறு சில உண்மைகளையும் போட்டுடைத்து இருந்தார்.

தமிழ்த்தேசியப்பேரவைக்காலத்தில்இருந்தே புளொட்டுடன் சேர்ந்து செயற்படத் தாங்கள் தயாராகவே இருந்தார்களாம், அதற்கும் முன்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைஉருவாக்குதற்கான பூர்வாங்கப் பேச்சுக்களின்போது ஈபிடிபியையும் உள்வாங்குவதற்குவிடுதலைப்புலிகள்இயக்கமே தயாராக இருந்ததாம். அண்ணர் தான் கூறிய கருத்துக்களை உணர்ந்துதான் தெரிவித்தாரா என்று தெரியவில்லை. ஆனால், அவர் தான் செய்துவரும்அரசியலைநியாயப்படுத்துவதற்காக அடிக்கும் குத்துக்கரணங்கள் அவர் மீதான அபிப்பிராயங்களை முற்றாகத் தகர்க்கின்றன.

.......................................

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது முதல் சிக்கனம், சிக்கனம் என்று பிலாக்கணம் பாடியது. அதன் விளைவு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிந்தது. சிக்கனத்தைக் காரணம்காட்டி நேற்றைய நாடாளுமன்ற அமர்வுக்கு பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வரவில்லை.

நாடாளுமன்ற சிறப்பு அமர்வு நேற்று ஒரு நாள் மட்டுமே இடம்பெற்றது. ஒரு நாள் அமர்வுக்காகக் கொழும்புக்கு வருவதற்காக பெருமளவு பணத்தைச் செலவிட முடியாது என்ற சிக்கனத்தை அவர்கள் கடைப்பிடித்ததன் விளைவாகவேபெரும்பாலானவர்கள்கூட்டத்திற்கு வரவில்லை.

தூர இடங்களில் இருந்து வருபவர்கள், ஒரு கூட்டத்திற்காகத்தாங்கள்வருவதற்குபெருமளவில் வாகன எரிபொருள் செலவு ஏற்படும் என்றும் அது நாடாளுமன்றக் கொடுப்பனவுகளால் ஈடுகட்டப்படாது என்றும் தெரிவிக்கின்றனர். நான்கைந்து நாட்கள் கூட்டத்தொடர் நடந்தால், கொழும்பில் தங்கியிருந்து அந்தச் செலவை ஈடுசெய்துவிடமுடியும், ஆனால் ஒருநாளைக்கு என்றால் வந்துபோக முடியாது, செலவு அதிகம் என்று சிக்கெனப் பிடிக்கிறார்கள். நல்ல சிக்கனம்தான் போங்கள்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## செம்மணியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

33பேரின் எச்சங்கள் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் அந்த இடத்தைப் பாதுகாப்பதற்கு கூடாரங்களோ அல்லது பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. புதைகுழியில் கண்டுபிடிக்கும் அடையாளங்களை, பாதுகாப்பதற்கான கூடாரங்களை அமைத்தால் மாத்திரமே அவற்றை ஒழுங்காகப் பேண முடியும். மழை பெய்யுமானால் அவற்றிற்குப் பாதிப்புகள் ஏற்படும்.

டிஎன்.ஏ. பரிசோதனைகள்செய்யப்படும்போது சில கஷ்டங்கள் ஏற்படும். எனவே இவை உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாகசெய்திசேகரிப்பைமேற்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்குஐந்துநிமிடம்மாத்திரமே அங்கு சென்று பார்த்து செய்தி சேகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாள் முழுவதும் வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால் ஐந்து நிமிடங்கள் மாத்திரமே ஊடகவியலாளர்களுக்கு செல்லக்கூடியவாறு உள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின்அறிக்கையின் அடிப்படையில்ஒருநாளைக்குஇரண்டுதடவைகள் செல்லமுடியும்என சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இன்று ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாயில்ஒருநாளைக்குமூன்று தடவைகள்சென்றுசெய்திகளைசேகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் செம்மணியில்மாலைநேரம்ஒருதடவைமட்டுமே அனுமதிவழங்கப்படுகின்றது. இதில்பெரியளவில் சந்தேகங்கள்ஏற்படுதற்கானகாரணம்நேற்றைய தினம் புத்தகப் பையொன்று கண்டுபிடிக்கப்பட்ட வேளையில் அதனை அங்கிருந்து அகற்றுமாறு சில உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன என எங்களுக்கு உறுதிப்படுத்தப்படாத சில தகவல்களும் கிடைத்தன. ஆனால் அங்கிருந்த ஊடக நண்பர் ஒருவர் அதனை உடனடியாக புகைப்படம் எடுத்ததன் காரணத்தினால் அது வெளிவந்திருக்கின்றது.

இந்த விடயங்களை மூடிமறைக்க ஆளும்தரப்பு செயற்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பிலும் எங்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கின்றன. ஓரளவு பொலிஸாரின் பாதுகாப்பும்,அப்பிரதேச மக்களின் பாதுகாப்பினையும் தவிர அப்பகுதியில் பாதுகாப்பினைஉறுதிப்படுத்தக்கூடியவகையிலும் மக்களின் நம்பிக்கையினை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஆளும்தரப்பு ஏன் பதுகாப்பை வழங்குவதற்குத் தயங்குகின்றது?

அப்பகுதியில் கூடுதலான பாதுகாப்பை வழங்கி அப் பகுதியில் மேலும் ஆய்வுகளை செய்யக்கூடிய சூழலை உருவாக்கவேண்டுமே தவிர பாதுகாப்பு இல்லாமல் வைத்திருப்பதற்கான காரணம் என்ன என்பதே கேள்வியாகவுள்ளது.

இதுவரையில் அப்பகுதியில் சீ.சீ.ரி.வி. கமராக்கள் பொருத்தப்படவில்லை. கொக்குத்தொடுவாயில்புதைகுழிஅகழ்வின்போது சீ.சீ.ரி.வி. பூட்டப்பட்டிருந்தது. ஆனால்செம்மணியில் 33 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரும்சீ.சீ.ரி.வி. கமராக்கள்பூட்டப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு ஏன் அலட்சியமாகச் செயற்படுகின்றது என்ற கேள்வி எனக்குள்ளது. செம்மணியில் நடைபெறும் விடயங்கள்பலசந்தேகங்களைஏற்படுத்தியுள்ளன. கண்டுபிடிக்கப்படும் மனித எச்சங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இதனை பாதுகாக்க ஏன் ஆளும்தரப்பு தயங்குகின்றது என்ற கேள்வி வருகின்றது.

இந்த விடயங்கள் குறித்து அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் மக்களுக்கு ஆளும்தரப்புமீதுபெரும்சந்தேகம்ஏற்படுவதுடன் இதற்கானநீதிமறுக்கப்படும், மக்களின்எதிர்பார்ப்பு பூர்த்திசெய்யப்படாது என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது.அவ்வாறான சந்தேகங்களை நீக்கவேண்டுமானால் ஊடகவியலாளர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று தடவை சென்று செய்தி சேகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். சீ.சீ.ரி.வி. கமராக்கள் பூட்டப்படவேண்டும். அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும். அதேபோன்று விசாரணைகளுக்கும் பரிசோதனைகளுக்கு தேவையான வளங்களை ஆளும்தரப்பு ஒதுக்கவேண்டும். - என்றார்.

## நள்ளிரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டேன்யூரோ4லீற்றர்ஒன்றின்விலையிலும்(341 ரூபா), எதுவித மாற்றங்களும்செய்யப்படவில்லை எனவும்இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் விலைத்திருத்தங்களுக்கு அமைவாக தாங்களும் எரிபொருள் விலைத்திருத்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

## செம்மணி பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

செம்மணியில் குழந்தை ஒன்றை அணைத்தவாறுஒருபெண்ணின்எலும்புக்கூடு மீட்கப்பட்டதுஎன்றுசமூகவலைத்தளங்களில் ஏற்கனவே ஒ-ரு தகவல் தவறாகப் பரப்பப்பட்டு வருகின்றது. அப்படியான எந்தவொருஎலும்புக்கூடும்மீட்கப்படவில்லை என்று களத்தில் பணியாற்றுபவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா, குழந்தையை அணைத்தபடி இருக்கும் ஒரு பெண்ணின் எலும்புக்கூடும் செம்மணியில் மீட்கப்பட்டது என்று தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே செம்மணி குறித்த ஏ.ஐ. படங்களைப் பகிர்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“செம்மணி சித்திபாத்தி மனித புதைகுழி அகழ்வின் இரண்டாம்கட்டத்தின் ஐந்தாம்நாள் அகழ்வுவரையில்33மனிதஎலும்புக்கூ-டுகள் அடையாளம்காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பாக நிபுணர்கள் இன்னும் அதிகமாகப் பணியாற்ற வேண்டிய தேவைப்பாடு இருப்பதால் இன்று பகல் பொழுதில் இரண்டு சிறுவர்களின் உடல்கள் மட்டுமே அகழ்ந்து எடுக்கப்பட்டு ஆய்வுக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தமட்டத்தில்உள்ளஎலும்புத்தொகுதிகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து குழப்பமான சூழலில் இருப்பதால் சரியான விதத்தில் ஆய்வொன்றைச் செய்து தெளிவான விதத்தில் சரியாக அகழ்ந்த எடுப்பதற்கு நேரம் எடுக்கும் என்பதால் இன்று புதிதாக எதுவுமே அடையாளப்படுத்தப்படவில்லை.

சமூக வலைத்தளங்களிலும் பொதுவெளியிலும் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செயற்கை படங்களை பரப்புவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். எதிர்வரும் காலத்தில் தொடர்ந்து இவ்வாறான படங்கள் பகிரப்படுமாக இருந்தால் குற்றவியல் விசாரணைகளை இடையூறு செய்தார்கள் என்ற அடிப்படையிலும் நிலுவையில் உள்ள வழக்கில் நீதிமன்றை அவமதித்தார்கள் என்ற அடிப்படையிலும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## சிக்கலான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக்கூடுகளை வெளியே மீட்டெடுப்பதில் கடும் சவாலை மீட்புக் குழு எதிர்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகியுள்ள சட்டத்தரணி ரணித்தா தெரிவித்தார்.

என்புத் தொகுதி ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதால் எலும்புக் கூடுகளை வெளியே பிரித்தெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தோண்டும்பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்தொல்பொருள்துறையினரும் சட்ட மருத்துவ அதிகாரிகள் சிலரும் இன்று சிந்துப்பாத்திக்கு வரவுள்ளனர் என்று தெரிகிறது. அவர்களின் உதவியுடன் புதிய நான்காவது தொகுதியைத் தோண்டும் பணிகள் இன்று தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தருமபுரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றினர், வீட்டு உரிமையாளரான 55 வயதுடைய பெண் ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான விசுவமடு கொழுந்துப்புலவு பகுதியை சேர்ந்தவர் 55 வயதுடைய பெண்ணையும் மற்றும் தடயப் பொருட்களையும் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

## தேசிய மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் மீறியுள்ளது. ஜனாதிபதித்தேர்தலில்கூறத்தொடங்கிய பொய்களை உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வரையும் தொடர்ந்து அவற்றின் மூலம் மக்களை ஏமாற்றியிருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் என்ற கட்சி அரசியல் விலைமாதுவாகியுள்ளது.

அதிகாரத்துக்காக அனைத்தையும் காட்டிக் கொடுக்கும்நிலைப்பாட்டையே இந்த ஆளும்தரப்பு பின்பற்றுகின்றது. அன்று தொண்டமான் ஊழல்வாதியென்று கடுமையாக விமர்சித்தனர். ஆனால் நுவரெலியாவில் ஆட்சியமைப்பதற்கு தொண்டமான் குழுவின் ஆதரவைப் பெற்றுக் கொண்டனர்.

அதேபோன்றுதான் தெற்கு மற்றும் கிழக்கில் ரிஷாத்பதியுதீன் மற்றும் பொதுஜன பெரமுனவின் ஆதரவையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இவற்றுக்கு அப்பால் ஒரு படி மேல் சென்று குண்டர்களை அனுப்பி அராஜகத்திலும் ஈடுபடுகின்றனர். பாதாள உலகக் குழுக்களை முற்றாக ஒழிப்பதாகக் கூறினர். ஆனால் இன்று பாதாள உலகக் குழு ஆளும்தரப்புக்கு உதவுகிறது.

இவ்வாறு அதிகாரத்துக்காக எதையும்செய்யத் தயாராக இருப்பதாலேயே தேசிய மக்கள் சக்தியை அரசியல் விலைமாது என்கின்றோம்.

சபை உறுப்பினர்களைத் தவிர அவற்றுக்குள் பிரவேசிப்பதற்குவேறுயாருக்குஅதிகாரமிருக்கிறது? ஊடகங்களுக்குகூட அனுமதி மறுக்கப்படும் இடங்களில் தேசிய மக்கள் சக்தியின் குண்டர் கும்பல் நுழைந்து அராஜகமாகச் செயற்படுகிறது.

முடிந்தால் இவர்களை கைது செய்யுமாறு ஜனாதிபதி, ஆளும்தரப்பு மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு சவால் விடுக்கின்றோம். அவர்களால் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்பட்டிருக்கின்றனர்.

1988, 1989களில் காணப்பட்ட வன்முறை கலாசாரத்தையே தற்போதும் பின்பற்ற முயற்சிக்கின்றனர். வன்முறைகலாசாரம் என்பது ஜே.வி.பி.யின் மரபணுவில் ஊறிய ஒன்றாகும். எனவே ஜே.வி.பி.யையும் வன்முறையையும் பிரிக்க முடியாது. வெலிகம பிரதேசசபைக்குள் நுழைந்துஅராஜகத்தில்ஈடுபட்ட குண்டர்கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதையே எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதிகாரத்துக்காக இவ்வாறு கீழ்தரமாக செயற்பட வேண்டாம் என ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

58 சபைகளில் போட்டியிட்டாலும், அவற்றில் 12 சபைகளில் தமிழ் மக்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். ஒன்று அல்லதுஇரண்டுபிரதிநிதிகளைப்பெறுவதற்காகவே அவற்றில் நாம் போட்டியிட்டோம். அப்படிப் போட்டியிட்டுப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றும் கொண்டோம்.

மிகுதி 46 சபைகளில் 34 சபைகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நிர்வாகங்களை அமைத்துள்ளது. ஆகவே, 58 சபைகளில், 46இல் எமது இலக்கை அடைந்துள்ளோம். மிகுதி சபைகளிலும் இரண்டாவது இடத்தை வகிக்கின்றோம்.

இது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்த பெரு வெற்றி என்பதற்கு அப்பால், மக்கள் எமக்குக் கொடுத்திருக்கும் ஆணையாக நாம் ஏற்றுக்கொண்டு உள்ளூராட்சி சபைகளின் முழு அதிகாரங்களையும் உபயோகித்து மக்களுக்குச் சேவையாற்றுவோம் - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 2600 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித்தேர்தலில்சொத்துவிவரங்களை சமர்ப்பிக்காத 13 வேட்பாளர்களுக்கு எதிராகவும், பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 1064 வேட்பாளர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 75,000க்கும் அதிக வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில்அவர்களில் 2600க்கும் மேற்பட்டோர் தமது சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்கவில்லை. இவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தெரிவான உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவது மாத்திரமே தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும். ஏனைய சபை நடவடிக்கைகளுக்கும் ஆணைக்குழுவுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அவை மாகாண ஆணையாளர்களுடன் தொடர்புடையவையாகும். உறுப்பினர்களது அரசியல் நடவடிக்கைகளிலும் தேர்தல் ஆணைக்குழு தலையிடாது.

கட்சி ரீதியில் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்றுநடவடிக்கைஎடுக்கப்பட்டுஅவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால், அதனுடன் தொடர்புடைய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரமுள்ளது.

அதற்கமையவே தேர்தல் ஆணைக்குழு செயற்படும். அதனை விடுத்து அரசியல் விவகாரங்களில் எமது எவ்வித தலையீடும் இருக்காது என்றார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் தருணம்

**செம்மணியில் தொடர்ந்து தோண்டப்பட்டு வரும் மனிதப்புதைகுழிகள், இலங்கையின் இருட்டுச்சூழலான உள்நாட்டுப் போர்காலத்தின் ஆதாரங்களாகவும், காணாமலாக்கப்பட்டதமிழர்களின்நிஜக்கதைகளுக்கான சாட்சியாகவும் விளங்குகின்றன. இந்தக் கட்டத்தில், உண்மைகளை வெளியெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது மட்டுமின்றி, அவற்றை மெய்ப்பிக்கும் விதத்தில் தகவல்களை ஆவணப்படுத்துவதும் மிக முக்கியமான ஒன்று.**

**ஆனால், இந்நிலையில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) தொழில்நுட்பத்தின் ஆழமற்ற, நிர்பந்தமற்ற பயனாளர்கள் சிலர் உருவாக்கிய படங்கள் சமூக ஊடகங்களில் பரவத் தொடங்கியுள்ளது. இந்தக் கற்பனைப் படங்கள், உண்மையான புகைப்படங்கள் அல்லது தகவல்களைப்போல் தோற்றமளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக, உண்மையைப்பற்றி குழப்பத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், தனது உரையில், ஒரு செயற்கை நுண்ணறிவுப் படத்தை உண்மையான ஆதாரமாக மேற்கோள்காட்டியிருப்பது மிகவே பெரிய விபரீதக் குறியீடாக அமைந்துள்ளது.**

**இந்த வகையான தொழில்நுட்பப் பயன்பாடுகள், வெறும் தவறான தகவல்களை மட்டுமன்றி, நெஞ்சை வெதும்பச்செய்யும் உண்மை ஆதாரங்களைப் புழுதியாக்கும் ஆபத்தையும் தாங்கி வருகின்றன. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர், தமது உறவினரின் எலும்புக்கூடுகளை உறுதி செய்யும் அந்தப் பரிதாபமிக்க வேளைகளில், கற்பனைகளை உண்மை என்று காட்டும் செயற்கை படங்கள் பரவுவது, அவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் செயல் மட்டுமல்ல; நீதிக்கான தேடலுக்கும் தடையாகும்.**

**இந்தச் சூழ்நிலையில், பத்திரிகைச் செய்தியாளர்கள், சமூக ஊடகத் தலைவர்கள், பொது மனித உரிமைப் பிரவாகங்கள், மற்றும் சட்டப் புலவர்கள் அனைவரும் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டிய நேரம் இது. உண்மையை வெளிக்கொணர்வது முக்கியம். ஆனால், உண்மையைச் சிதைக்கும் தவறான தொழில்நுட்பப் பயன்பாடுகள், இத்தகைய முக்கியமான விசாரணைகளையும் அதன் மீதான நம்பிக்கையையும் நிராகரிக்கத் தூண்டும்.**

**செயற்கை நுண்ணறிவு என்பது நம் எதிர்காலத்தின் கருவியாக இருக்கும் என்பது உண்மைதான். ஆனால், அதனுடைய எல்லைகள், அது உருவாக்கும் பிம்பங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றி தெளிவும் பொறுப்பும் இல்லாமல் பயன்படுத்தப்படும் பொழுது, அது சமூகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும். குறிப்பாக, செம்மணியைப் போன்ற நம்பிக்கையை வளர்க்கும், உண்மை தேடல் இடம்பெறும் ஒரு நிலத்தில் இது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்.**

**எனவே, செயற்கை நுண்ணறிவுப் படங்களை இந்தச் செம்மணிவிசாரணையின்சூழ்நிலையில்உருவாக்குவதை தவிர்ப்பது முக்கியம். உண்மை ஆதாரங்களை மட்டுமே முன்னிறுத்தி, காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கானநீதிக்கானபாதையைநாமெல்லாம் பாதுகாக்க வேண்டிய கடமையில் இருக்கின்றோம்.**

**செயற்கைநுண்ணறிவுகற்பனையைஉருவாக்கட்டும். ஆனால், உண்மை என்பது அந்தக் கற்பனைகளால் விழுங்கப்படக் கூடாது. செம்மணி ஒரு சாட்சி; அதைச் சிதைக்காதீர்கள்.**

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிரான வழக்கு ஜூலை 28க்கு நேற்று ஒத்திவைப்பு

உயிர்த்தஞாயிறுதாக்குதல்கள்தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான வழக்கு ஜூலை 28 மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும் தடுக்கத் தவறியதன் ஊடாக கடமையைச் செய்யத் தவறியதாக, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு மேல் நீதிமன்றின் ட்ரயல் அட் பார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று திங்கட்கிழமை (30) நீதிபதிகள் நாமல் பலல்லே மற்றும் முகமது இர்ஷதீன் ஆகியோர் அடங்கிய மேல் நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது, சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்சன் டி சில்வா, மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு நீதிபதியாக ஆதித்யா படபெண்டிகே ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளமையினால் தலைமை நீதிபதியால் மாற்றீட்டாளர் நியமிக்கப்படும் வரை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் புதிய நீதிபதி ஒருவர் பதவி வகிப்பார் என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

அதன்படி, வழக்கு விசாரணைக்கு புதிய திகதியை நிர்ணயிக்குமாறு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தைக் கோரினார்.

பின்னர், வழக்கை ஜூலை 28 ஆம் திகதிக்கு நீதி மன்றம் ஒத்திவைத்தது.

மூன்று நீதிபதிகள் கொண்ட மேல்ல் நீதிமன்ற அமர்வு, ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜெயசுந்தர ஆகியோரை விடுவித்து விடுதலை செய்ய உத்தரவிட்டிருந்தது.

இருப்பினும், சாட்சிகளை அழைக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதற்கான மேல் நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு சட்டவிரோதமானது என அறிவிக்கக் கோரி சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

மனு மீதான பரிசீலனையின் பின்னர், இறுதி தீர்மானத்தை அறிவிப்பதற்கு முன்பு உயர் நீதிமன்றம் சாட்சிகளை அழைத்து புதிய விசாரணையை நடத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# பலஸ்தீனத்திற்கு ஆதரவாக கொழும்பில் நேற்று பேரணி

'பாலஸ்தீனத்துக்கு சுதந்திரம் : போரை நிறுத்து' என்ற கருப்பொருளை வலியுறுத்தி, சிவில்சமூகஅமைப்புக்கள்மற்றும்பாலஸ்தீன ஐக்கிய மக்கள் இயக்கம் ஆகியன இணைந்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை முன்னெடுத்தன.

பெருந்திரளான மக்களின் பங்கேற்பில் கொழும்பு கொம்பனித் தெருவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரணி இஸ்ரேல், அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணியாக அமைந்தது.

கொழும்பு 3, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்கதுதூரகத்தை நோக்கிச் சென்ற இப்பேரணியினர் 'கொல்லாதே கொல்லாதே குழந்தைகளை கொல்லாதே; 'இனப்படுகொலையை நிறுத்து' என கோஷமிட்டும் பதாதைகளை ஏந்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.



# யானை மிதித்து அநுர உயிரிழப்பு

அநுராதபுரத்தில் மகாவிலாச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேமடுவ பகுதியில் காட்டு யானை தாக்கி சிவில் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மகாவிலாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வில்பத்து சிவில் பாதுகாப்பு படை முகாமில் பணியாற்றிய டி.அநுரகுமார திசாநாயக்க என்ற 47 வயதுடைய சிவில் பாதுகாப்பு அதிகாரியே உயிரிழந்துள்ளார்.

சிவில்பாதுகாப்புஅதிகாரிசனிக்கிழமை இரவு தனது பயிர்களை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக தோட்டத்திற்குச் சென்றிருந்தார். அவர் வீடுதிரும்பாததால் அவரைத் தேடிச் சென்ற மனைவி அவர் யானை தாக்கி இறந்து கிடப்பதைக் கண்டு தமக்குத் தகவல் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2025இல் வெளியிடப்பெற்றது